# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.387/2012 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஜூன் திங்கள் 23-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா. 1 | 23.06.2023 |
| பெயர் - வசந்தா | தந்தை/கணவர் பெயர் - |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

1. வழக்கின் 1ம் வாதி எனது மகள் ஆவார். தற்போது வரை அவர் இவ்வழக்கில் சாட்சி அளிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்து விவர பாட்டியலில் காலி நிலம் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் நான் காலி நிலத்தை வாங்கி பின்னர் வீடுகட்டினேன். வீடு கட்டியது சம்மந்தமான ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் இருப்பதாக சொல்லும் வீட்டிற்கு வரி எதுவும் கட்டவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. தாவா சொத்தில் நான் கட்டியிருந்த வீட்டை இடித்துவிட்டார்கள் தற்போது அது காலி இடமாகத்தான் உள்ளது. பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் பிரதிவாதி வீடு கட்டி மின் இணைப்பு பெற்று சொத்து வரி கட்டி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரியா நகர் என்பது அரசு அனுமதி பெற்று அமைக்கப்பட்ட மனைபிரிவு கிடையாது என்று சொன்னால் சரிதான். 12.06.2012 அன்று அம்பத்துார் தாசில்தார் கொடுத்த கடிதத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நான் வீடு கட்டியிருந்ததாக சொல்வதை காட்டுவதற்கான விவரம் எதையும் எனது தாவாவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா

சொத்தை அளந்து சரியான முறையில் நிர்ணயம் செய்வதற்கு நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இன்றைய தேதியில் வழக்கு சொத்து என்னுடைய பெயரில் உள்ளது என்று சாட்சி முதலில் தெரிவித்துவிட்டு பின்னர் பாதியை தன் மகளுக்கு கொடுத்துவிட்டதாக கூறினார். 2012 ல் இந்த வழக்கு தாக்கல் செய்யும் பொழுது ஏற்கனவே எனது மகள் பெயரில் எனது பாதி சொத்தை 2006-லேயே எழுதி வைத்துவிட்டேன். தாவா சொத்தில் உள்ள 2100 சதுர அடியில் சுமார் 1000 சதுர அடியை எனது மகளுக்கு எழுதி கொடுத்துவிட்டேன்.

4. மேற்படி விவரங்களை எனது தாவாவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கு உள்ளது என்று சரிவர நிர்ணயம் செய்யாமல் பிரதிவாதி வாங்கிய சொத்தில் நான் உரிமை கொண்டாட முயல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தவறான காரணங்களை காட்டி இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(இத்துடன் குறுக்குவிசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.)